இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1988, திசெம்பர் 23 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.15

# 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஔ 3/86

அமைச்சரினால் குறித்துரைக்கப்படவேண்டிய இடப்பரப்புகளில் மத்தியஸ்த சபைகளைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய சபைகளின் தத்துவங்களையும் கடமைகளையும் வரையறுத்துக் கூறுவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. (1) சனாதிபதியானவர், (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பிடு செய்யப்படும்) ஐந்து ஆட்களைக் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும்; அவர்களுள் மூவராவது உயர்நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதித்துறைப் பதவி வகித்துள்ள ஆட்களிலிருந்து நியமிக்கப்பட்டவராதல் வேண்டும். மேலே கூறப்பட்டவாறு நீதித்துறைப் பதவி வகித்துள்ள மூன்று உறுப்பினர்களில் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராகச் சனாதிபதியானவர் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். — ஆணைக் குழுவை நியமித்தல்.

(2) தவிசாளரும் ஆணையாளர்களும், அவர்களுள் எவரேனும் ஒருவர் முன்னரே இறந்தால், பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், தவிசாளரின் அல்லது ஆணையாளர்களின் பதவிக்காலம் முடிவுறும்போது ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படாதிருப்பின், அத்தகைய முடிவுறுகைக்கு நேர் முந்திய நாளன்று பதவிவகிக்கும் தவிசாளரும், ஆணையாளர்களும், புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும்வரை பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) தமது பதவிக்காலம் முடிவுற்றதன்மேல் பதவியை வறிதாக்குகின்ற தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(4) (அ) தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர் சனாதிபதிக்கு முகவரியிடனுப்பபடும் கடிதம் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(ஆ) சனாதிபதி, காரணமொன்றைக் காட்டாமல் தவிசாளரை அல்லது எவரேனும் ஆணையாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) பதவியிலிருந்து விலகியுள்ள அல்லது அகற்றப்பட்டுள்ள தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் ஆகாது.

(6) (அ) தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர் இறப்பதன், பதவி விலகுவதன் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் காரணமாக ஆணைக்குழுவில் ஏதேனும் வெற்றிடம் எழுமிடத்து, சனாதிபதியானவர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புதல் வேண்டும்.

(ஆ) தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர் இறப்பதால் பதவி விலகுவதால் அல்லது அகற்றப்படுவதால் எழுகின்ற வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்படுகின்ற ஆளெவரும் அவரது முன்னுறுப்பவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதிருந்துள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) சுகவீனம் காரணமாக அல்லது வேறு உடற்குறைபாடு காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, ஆணையாளரொருவர் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகுமிடத்து, அத்தகைய இயலாமை அல்லது இல்லாமைக் காலப்பகுதிக்காக அவரது இடத்தில் செயலாற்றுவதற்குத் தகுதியான ஆளொருவரைச் சனாதிபதி நியமிக்கலாம்; அத்துடன் அவ்வாறு இயலாதவராகவுள்ள அல்லது இலங்கையில் இல்லாதவராகவுள்ள ஆணையாளர் ஆணைக்குழுவின் தவிசாளராக இருக்குமிடத்து, ஆணைக்குழுவின் தவிசாளரால் கடமைகள் மீள மேற்கொள்ளப்படும் வரையில் அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென, முன்னர் நீதித்துறைப் பதவிவகித்துள்ள வேறோர் ஆணையாளரைச் சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(8) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும், தவிசாளருக்கும், ஆணையாளருக்கும் ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும்.

(9) ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண்ணை அமைதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் ஆணைக்குழுவின் கூட்டமெதிலும் தலைமைதாங்குதலும் வேண்டும். ஆணைக்குழுவானது, அத்தகைய ஆணைக்குழுவின் கூட்டங்கள் தொடர்பிலும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவது தொடர்பிலும், அதனது சொந்த நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(10) தவிசாளரின் அல்லது எவரேனும் ஆணையாளரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாட்டின் காரணமாக மட்டும், ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

ஆணைக்குழுவின் தத்துவங்களும் கடமைகளும்.

3. ஆணைக்குழுவானது—

(அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மத்தியஸ்தர்களை நியமித்தல் வேண்டும், இடமாற்றுதல் வேண்டும், பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டுமென்பதுடன் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ், தமது கடமைகளையும் பணிகளையும் மத்தியஸ்தர்கள் புரிவதையும் நிறைவேற்றுவதையும் மேற்பார்வை செய்தல் வேண்டுமென்பதுடன் கட்டுப்பாடு செய்தலும் வேண்டும்;

(இ) அத்தகைய மத்தியஸ்தர்களுக்கு, அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை வழங்குதல் வேண்டும்.

மத்தியஸ்த சபை இடப்பரப்புகள்.

4. அமைச்சர், காலத்துக்குக்காலம் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் (இதனகத்துப்பின்னர் " மத்தியஸ்த சபை இடப்பரப்பு " எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாக வேண்டியதுமான இடப்பரப்பொவ்வொன்றையும் குறித்துரைத்தல் வேண்டும்.

மத்தியஸ்தர்கள் குழாத்தை நியமித்தல்.

5. (1) மத்தியஸ்த சபை இடப்பரப்பு ஒன்று தொடர்பில் 4 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று வெளியிடப்பட்டதன்மேல், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்க, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களிலிருந்து தவிசாளரொருவரையும், மத்தியஸ்தர்கள் குழாமொன்றையும் அத்தகைய இடப்பரப்புக்கென நியமிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் ஆணைக்குழுவானது எடுத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் மத்தியஸ்தர்கள் குழாத்துக்கு நியமிக்கப்படுவதற்குத் தகவுடைய ஆட்கள் பின்வருவோராதல் வேண்டும் :—

(அ) மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றில் வதிகின்ற அல்லது அவ்விடப்பரப்பில் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள்;

(ஆ) விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு அவ்வாறு முடிவு செய்தால், அத்தகைய மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியே வதிகின்ற அல்லது அவ்விடப்பரப்புக்கு வெளியே ஏதேனும் வேலையிலீடுபட்டுள்ள எவரேனும் ஆள்; அத்துடன்

(இ) அத்தகைய மத்தியஸ்த சபை இடப்பரப்பானது எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ, அந்நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற எவரேனும் பகிரங்க அலுவலர் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற அலுவலர் ஒருவர், அந்நிருவாக மாவட்டத்தினுள் உள்ள மத்தியஸ்த சபை இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் நியமிக்கப்படுகின்ற குழாத்துக்கு நியமிக்கப்படத் தகவுடையவராதல் வேண்டும்.

**மத்தியஸ்த சபைகளின் நியாயாதிக்கம்.**

6. (1) அந்த மத்தியஸ்த சபை இடப்பரப்புக்குள் முழுமையாக அல்லது பகுதியளவில் எழுகின்ற ஏதேனும் பிணக்கை, அல்லது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும், அந்த மத்தியஸ்த சபை இடப்பரப்புக்குள் புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்டதுமான ஏதேனும் தவறை மத்தியஸ்தம் மூலம் தீர்த்துவைப்பதற்காக, ஆளெவரும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் மத்தியஸ்த சபை இடப்பரப்பின் குழாத்தினது தவிசாளருக்கு விண்ணப்பமொன்றை செய்யலாம் :

ஆயின், பிணக்கானது—

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் தொடர்பானதாக இருக்குமிடத்து, எந்த மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள், அத்தகைய அசைவுள்ள ஆதனம் வைத்திருக்கப்பட்டுள்ளதோ அல்லது அசைவற்ற ஆதனம் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு விண்ணப்பமானது செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒப்பந்தமொன்று தொடர்பானதாக இருக்குமிடத்து, அத்தகைய ஒப்பந்தமானது எந்த மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் செய்யப்பட்டதோ அந்த இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு விண்ணப்பமானது செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) சட்ட நீதிமன்றமொன்றில் வழக்கெழு காரணியாக அமைகின்ற விடயமொன்று தொடர்பானதாக இருக்குமிடத்து, அத்தகைய வழக்குத் தொடர்பில், நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் நீதிமன்றத்தின் ஆள்புல எல்லைகளுக்குள் உள்ள மத்தியஸ்த இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு விண்ணப்பமானது செய்யப்படுதல் வேண்டும்.

(2) பிணக்குக்காரர்களுள் ஒருவர்—

(அ) அரசாக இருந்தால் ; அல்லது

(ஆ) ஏதேனும் ஆதனம், பணம் அல்லது வேறு வருமதிகள் தொடர்பானதாகப் பிணக்கு இருக்குமிடத்து, பகிரங்க அலுவலர் ஒருவர் என்ற தன்மையில் செயலாற்றுகின்ற அத்தகைய அலுவலராக இருந்தால்; அல்லது

(இ) தவறானது, எத்தவறு தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் தொடரப்பட்டதோ அத்தவறொன்றாக இருக்குமிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதியாக இருந்தால்,

ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் எதுவும் குழாமொன்றின் தவிசாளரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் ஆகாது.

(3) விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்பட்ட கட்டணம் விதித்துரைக்கப்பட்ட முறையில் செலுத்தப்பட்டுள்ளதென்ற நிகழ்வைச் சான்றுபடுத்துகின்ற ஓர் ஆவணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

ஏதேனும் தற்காலிகப் பரிகாரம் வழங்குவதனை உட்படுத்துகின்ற வழக்குகள் தவிர்ந்த ஏனைய வழக்குகள் தீர்க்காமைக்கான சான்றிதழின்றி கோப்பிலிடப்படாமை.

7. (1) மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றுக்காக குழாமொன்று (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்விடப்பரப்பினுள் முழுமையாக அல்லது பகுதியளவில் எழுகின்ற ஏதேனும் பிணக்கு அல்லது அவ்விடப்பரப்பினுள் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்ற ஒரு தவறு தொடர்பிலான வழக்கு நடவடிக்கை எதுவும்—

(அ) பிணக்கானது இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியை விஞ்சாத அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம், அல்லது ஒரு கடன், சேதஈடு அல்லது கோரிக்கை தொடர்பானதாயிருந்தால்; அல்லது

(ஆ) பிணக்கானது இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வழக்கொன்றாயிராத வழக்கெழு காரணமொன்றை நீதிமன்றமொன்றில் ஏற்படுத்துவதாயிருந்தால்; அல்லது

(இ) தவறானது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றாயிருந்தால்,

அத்தகைய வழக்கைத் தொடுக்கின்ற ஆள், 12 ஆம் பிரிவில் அல்லது 14(2) ஆம் பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட தீர்க்காமைக்கான சான்றிதழை ஒப்புவித்தாலொழிய, ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தில் கொடுக்கப்படுதலோ அல்லது முதனிலை நீதிமன்றம் எதனாலும் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் பிணக்கு தொடர்பிலான வழக்கொன்றில் வேண்டப்படும் நிவாரணமானது, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பாகம் (V) இன்கீழ் ஏதேனும் தற்காலிகப் பரிகாரம் வழங்கப்படுவதற்கான வேண்டுதலொன்றை உள்ளடக்

குவதாக இருக்குமிடத்து, அல்லது எப்பிணக்கு தொடர்பில் 6 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளதோ, அப்பிணக்குக்கான பிணக்குக்காரர் ஒருவர் அதனைத் தொடர்ந்து அப்பிணக்கு தொடர்பாக குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பாகம் (V) இன்கீழ் தற்காலிகப் பரிகாரம் ஒன்றுக்கான வேண்டுதலொன்றை உள்ளடக்கும் வழக்கொன்றை ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்குமிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய வழக்கை அத்தகைய தற்காலிகப் பரிகாரத்தினை வழங்குவதுடன் தொடர்புள்ள அளவுவரையில் மட்டும் ஏற்றுக் கவனிக்கலாமென்பதுடன் தீர்மானிக்கலாம். அத்தகைய தீர்மானத்தின் பின்னர் நீதிமன்றம்—

(அ) அதன் முன்னர் வழக்கெழு காரணமாக அமையும் பிணக்கு தொடர்பாக 6 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பமெதுவும் செய்யப்பட்டிருக்காதவிடத்து, அத்தகைய பிணக்கை, மத்தியஸ்தத்துக்கான பொருத்தமான குழாத்தின் தவிசாளருக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அப்பிணக்கு தொடர்பாக 6 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து, அப்பிணக்கு தொடர்பாக மத்தியஸ்தத்தைத் தொடரும்படி விடயத்துக்கேற்றவாறு, சபையொன்று அது வரையில் அமைக்கப்பட்டிருக்காதவிடத்து, பொருத்தமான குழாத்தின் தவிசாளரை அல்லது பொருத்தமான சபையின் தவிசாளரை பணித்தல் வேண்டும்.

(2) பிணக்கொன்று தொடர்பில், பிணக்குக்காரர்களில் ஒருவர் அரசாக இருக்குமிடத்து, அல்லது பகிரங்க அலுவலர் ஒருவர், அவர் அத்தகைய அலுவலர் என்ற தன்மையில் செயலாற்றும்போது அவரினால் ஆதனம் எதுவும் மீளப்பெறப்படுதல் அல்லது ஏதேனும் பணம் அல்லது எவையேனும் வேறு வருமதிகள் அறவிடப்படுதல் தொடர்பிலான பிணக்கொன்று தொடர்பில் அல்லது எத்தவறு ஒன்று தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அத்தவறு தொடர்பிலான எவையேனும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள எதுவும் ஏற்புடையதாதல் ஆகாது.

நீதிமன்றத்தினால் ஆற்றுப் படுத்தப் படுதல்.

8. மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றின், நியாயாதிக்கத்தை கொண்டிருக்கும் ஏதேனும் குடியியல் நீதிமன்றத்தில் ஏதேனும் பிணக்கு தொடர்பில் வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டிருக்குமிடத்து, நீதிமன்றமானது கட்சிக்காரர்களின் அந்த எழுத்திலான சம்மதத்துடன் மத்தியஸ்தம் மூலம் தீர்ப்பதற்காக அந்த இடப்பரப்புக்கென நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்குப் பிணக்கை ஆற்றுப்படுத்தலாம்.

மத்தியஸ்த சபையின் அமைப்பு.

9. (1) மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றுக்காக நியமிக்கப்பட்ட குழாமொன்றின் தவிசாளர், 6 ஆம் பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல் அல்லது 7 ஆம் அல்லது 8 ஆம் பிரிவின் கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகை ஒன்றின்மேல், அந்த மத்தியஸ்த சபை இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட குழாத்திலிருந்து பின்வரும் உறுப்பினர்களைக்கொண்ட மத்தியஸ்த சபையொன்றை (இது இதனகத்துப்பின்னர் “ சபை ” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைத்தல் வேண்டும்:—

(அ) பிணக்குக்காரர் ஒவ்வொருவராலும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(ஆ) (அ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் :

ஆயின், எவ்வாறுயினும், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்குக்காரர்கள் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்கள், அவர்களின் அந்தந்தத் தெரிவுகள்பற்றி உடன்படுவதற்கு இயலாதவராயிருக்கின்றவிடத்து, குழாத்தின் தவிசாளர், அவசியமான தெரிவைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் சபையின் பிரதான மத்தியஸ்தராகச் செயலாற்றுதல் வேண்டும் ; இவர் இதனகத்துப்பின்னர் “ பிரதான மத்தியஸ்தர் ” எனக் குறிப்பீடுசெய்யப்படுவார் :

ஆயின், எவ்வாறுயினும், குழாத்தின் தவிசாளர் சபையின் உறுப்பினரொருவராகத் தெரிவுசெய்யப்படுமிடத்து, அவரே பிரதான மத்தியஸ்தராகச் செயலாற்றுதல் வேண்டும்.

(3) சபை அமைக்கப்பட்டதன்மீது, எந்தப் பிணக்கு அல்லது தவறு தொடர்பில் விண்ணப்பம் அல்லது ஆற்றுப்படுத்துகை மத்தியஸ்தம் மூலம் தீர்க்கப்படுவதற்காகச் செய்யப்பட்டதோ, அந்தப் பிணக்கு அல்லது தவறை குழாத்தின் தவிசாளர் அத்தகைய சபைக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

மத்தியஸ்த சபையின் கடமைகள்.

10. ஒன்பதாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பிணக்கு அல்லது தவறு ஏதேனும் சபைக்கு ஆற்றுப்படுத்தப்படுமிடத்து, பிணக்குக்காரர்களை சுமுகமான தீர்வொன்றுக்குக் கொண்டுவருவதற்கும் அவர்களின் சம்மதத்தோடும், நடைமுறைச் சாத்தியமுள்ளவிடத்து பிணக்கு அல்லது தவறு மீள நிகழாமல் தடுக்கும்வகையில் அவர்களுக்கிடையேயான மனவருத்தத்திற்கான உண்மையான காரணத்தை அகற்று

வதற்கும் எல்லாச் சட்டமுறையான வழிவகைகளாலும் முயற்சிசெய்வது அத்தகைய சபையின் கடமையாதல் வேண்டும்; அத்துடன் இந்நோக்கத்துக்காக—

(அ) குறித்துரைக்கப்பட்ட ஒரு நேரத்திலும், இடத்திலும், ஒன்றில் ஒன்றாகவோ, அல்லது தனியாகவோ மத்தியஸ்த மாநாடொன்றில் சமுகமளிக்குமாறு பிணக்குக்காரர்களுக்கும் சபை அவசியமானவர்களெனக் கருதுகின்றவாறான அத்தகைய வேறு ஆட்களுக்கும் அறிவித்தல் வேண்டும்;

(ஆ) தீர்வொன்றுக்கு வருவதற்குப் பிணக்குக்காரர்களுக்கு உதவக்கூடிய எவரேனும் சாட்சிக்காரர்களை அல்லது ஆவணங்களை அத்தகைய ஏதேனும் மாநாட்டுக்குக் கொண்டுவரும்படி, சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்ட ஆளெவரையும் தேவைப்படுத்துதல் வேண்டும்;

(இ) தீர்வொன்றுக்கு வருவதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான மத்தியஸ்த மாநாடுகளைக் கூட்டுதல் வேண்டும்;

(ஈ) பதின்மூன்றும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் அதன் நடவடிக்கைளைப் பூர்த்தியாக்குதல் வேண்டும்; அத்துடன், அவ்வாறு செய்யத்தவறுகின்றவிடத்து, அத்தகைய பிணக்கை அல்லது தவறைத் தீர்த்துவைக்க இயலாமற்போய் விட்டது எனக் கூறுகின்றதும் பிரதான மத்தியஸ்தரினால் கையொப்பமிடப்பட்டதுமான தீர்க்காமைக்கான சான்றிதழொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வழங்குதல் வேண்டும்.

தீர்வுகாணப்படுமிடத்து.

11. (1) பிணக்குக்காரர்கள் தீர்வொன்றுக்கு உடன்படுமிடத்து, தீர்வுக்கான நியதிகள் எழுத்தில் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், பிரதான மத்தியஸ்தராலும், பிணக்குக்காரர்களாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்: அத்துடன் சபை—

(அ) தீர்வானது (6) ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றினால் சபையின் முன் கொண்டுவரப்பட்ட ஏதேனும் பிணக்கு அல்லது தவறு தொடர்பிலானதாக இருக்குமிடத்து, அதன் பிரதியொன்றைப் பிணக்குக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் உடனடியாக வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தீர்வானது 7 ஆம் அல்லது 8 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கு தொடர்பிலானதாக இருக்குமிடத்து, அதன் பிரதியொன்றை நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தீர்வின் பிரதியொன்று நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுமிடத்து, நீதிமன்றமானது, பிணக்குக்காரர்களுக்கு அறிவித்தல் கொடுத்தபின்னர், அத்தகைய தீர்வுக்கிணங்கத் தீர்வையொன்றைப் பதிதல் வேண்டும்.

**தீர்வுகாண முடியாத விடத்து.**

12. பிணக்குக்காரர்கள் தீர்வொன்றுக்கு உடன்படாதவிடத்து, சபையானது—

(அ) ஆறும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது சபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஒரு பிணக்கின் அல்லது தவறின் விடயத்தில், அத்தகைய பிணக்கு அல்லது தவறு அத்தகைய சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதென்றும், மத்தியஸ்தம் மூலம் பிணக்கை அல்லது தவறைத் தீர்க்க முடியாதிருக்கிறதென்றும் கூறுகின்றதும் பிரதான மத்தியஸ்தரால் கையொப்பமிடப்பட்டதும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலானதுமான தீர்க்காமைக்கான சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) ஏழாம் அல்லது 8 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தால் தீர்வுக்காக ஆற்றுப்படுத்தப்படும் பிணக்கொன்றின் விடயத்தில், பிணக்கை மத்தியஸ்தம் மூலம் தீர்க்கமுடியாதிருக்கிறதென்று பிரதான மத்தியஸ்தரால் கையொப்பமிடப்பட்டதும் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலானதுமான அறிக்கையை அத்தகைய நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

**சபை செயலாற்ற வேண்டிய காலவெல்லை.**

13. சபையானது, மத்தியஸ்தம் மூலம் தீர்ப்பதற்காக அதன் முன்னருள்ள, பிணக்கு அல்லது தவறு ஒவ்வொன்றும் தொடர்பில், சபை அமைக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுள், 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும், 14 ஆம் பிரிவிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**தீர்வுகளோடு இணங்கியொழுகத் தவறுதல் அல்லது அவற்றை மீறுதல்.**

14. (1) ஆறும் பிரிவின்கீழ் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தைப் பின்பற்றி மத்தியஸ்த சபையொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கு அல்லது தவறு தீர்க்கப்பட்டுள்ளவிடத்து, பிணக்குக்காரர்களுள் ஒருவர் எந்நேரத்திலும் அத்தீர்வோடு இணங்கியொழுகத் தவறுமிடத்தும் அல்லது தீர்வின் நியதிகளை மீறுமிடத்தும், மற்றக் கட்சிக்காரர் அத்தகைய தவறுகை அல்லது மீறுகைபற்றி உடனடியாகச் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றதன்மேல் சபையானது பிணக்குக்காரர்களுக்கும், அவசியமானவர்களென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு ஆட்களுக்கும் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சமுகமளிக்குமாறு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுக்கிடையே எழுந்திருக்கக்கூடிய எவையேனும் வேறுபாடுகளைத் தீர்த்துவைப்பதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன் புதிய தீர்வொன்றைச் செய்துகொள்வதற்கு உதவியளித்தலும் வேண்டும்.

அத்தகைய வேறுபாடுகளைத் தீர்த்து வைக்க இயலாதிருக்கின்றவிடத்து அத்தகைய பிணக்கை அல்லது தவறைத் தீர்த்துவைக்க இயலாமற் போய்விட்டது எனக் கூறுகின்றதும், பிரதான மத்தியஸ்தரினால் கையொப்பமிடப்பட்டதுமான தீர்க்காமைக்கான சான்றிதழொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சபையானது வழங்குதல் வேண்டும்.

பிரதிநிதித்துவம் வகித்தல்.

15. சபைக்கு முன்னருள்ள ஏதேனும் விடயத்தில் எவரேனும் பிணக்குக்காரர் சார்பாகத் தோன்றுவதற்கு, சட்டத்தரணி, முகவர் அல்லது வேறு ஆள் எவரும் உரித்துடையவராதலோ, அனுமதிக்கப்படுதலோ ஆகாது ;

ஆயின், எவ்வாறாயினும்.—

(அ) வாழ்க்கைத்துணை ஒருவருக்காக மற்ற வாழ்க்கைத்துணை ; அல்லது

(ஆ) பராயமடையாத ஒருவருக்காக அல்லது ஏதேனும் இயலாமைக்குட்பட்ட வேறு ஆளுக்காக, அவரது பெற்றோர், பாதுகாவலர் அல்லது காப்பாளர்

சபையொன்றின் முன்னர் பிரதிநிதித்துவம் வகிப்பது அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

சாட்சிக்காரர்களின் சிறப்புரிமைகள்.

16. (1) மத்தியஸ்த சபையொன்றின் முன்னர் கூற்றொன்றைச் செய்யும் ஆளொவ்வொருவரும், அத்தகைய கூற்று தொடர்பில் சட்ட நீதிமன்றமொன்றின் முன்னர் சான்று அளிக்கும் சாட்சிக்காரரொருவர் அத்தகைய சான்று தொடர்பில் எச்சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அச் சிறப்புரிமைகள் யாவற்றுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) மத்தியஸ்த சபையொன்றின் முன்னர் ஆளெவராலும் செய்யப்பட்ட கூற்றெதுவும் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

காலவிதிப்புத் தடை.

17. ஏதேனும் வழக்குக்காரணம் அல்லது தவறு தொடர்பாகக் காலவிதிப்புத்தடைக் காலப்பகுதியைக் கணக்கிடுவதில், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய வழக்குக்காரணமாக அல்லது அத்தகைய தவறாக அமையும் பிணக்கு தொடர்பில் மத்தியஸ்தர்கள் குழாமொன்றின் தவிசாளருக்கு எத்தேதியன்று விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றதோ அத்தேதியன்று தொடங்கி அப்பிணக்கு அல்லது தவறு தொடர்பில் 12 ஆம் பிரிவின் அல்லது 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியன்று முடிவடையும் காலப்பகுதி, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் புறக்கணிக்கப்படுதல் வேண்டும்.

மத்தியஸ்த சபையொன்றினால் தீர்க்கப்பட்ட தவறு இணக்கப்பட்டதாகக் கருதப்படுதல்.

18. இச்சட்டத்திலான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தவறானது, மத்தியஸ்த சபையொன்றினால் தீர்க்கப்படுமிடத்து, அத்தகைய தவறானது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 266 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காகவும், இணக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**கிராமசேவை அலுவலர் சபைக்கு உதவியளித்தல்.**

19. பத்தாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழும் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழும் அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் ஏதேனும் சபையானது, பிணக்குக்காரர் ஒருவருக்கு அல்லது வேறு ஆளுக்கு ஏதேனும் அறிவிப்பை அனுப்புவதற்கு மத்தியஸ்த சபை இடப் பரப்பினுள் உள்ள கிராமசேவை அலுவலர் பிரிவொன்றுக்காக நியமிக்கப் பட்ட எவரேனும் கிராமசேவை அலுவலரை உதவியளிக்குமாறு தேவைப் படுத்தலாமென்பதுடன், அத்தகைய கிராமசேவை அலுவலர் அவ்வாறு தேவைப்படுத்தப்படும்பொழுது, அதுதொடர்பில் அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லா உதவிகளையும் அத்தகைய சபைக்கு அளித் தலும் வேண்டும்.

**சபையின் உறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.**

20. இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சபை ஒவ்வொன்றினதும் உறுப்பினர்கள், அத்தகைய உறுப்பினர்களாக அவர்கள் செயலாற்று கின்றவரையும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத் தகைய சபைக்கு முன்னரான நடவடிக்கை ஒவ்வொன்றும் அச்சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குட்பட நீதித்துறை நடவடிக்கையொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**சபையானது, அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.**

21. இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சபை ஒவ்வொன்றும், இலஞ் சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறு வனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

**சபையின் அமைப்பி லுள்ள குறை பாடு சபையின் செயல்களையும் நடவடிக்கை களையும் செல்லுபடி யற்றனவாக்குத லாகாது.**

22. சபையின் அமைப்பிலுள்ள குறைபாடொன்று காரணமாக மட்டும் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

**ஒழுங்கு விதிகள்.**

23. (1) எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டு மென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ, அல்லது எக்கரு மம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் விதித்துரைக்கப்படவேண்டுமென இச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளி யீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் கசெற்றில் அது வெளியிடப்பட்டபின்னர் வசதியான அளவு விரைவில் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்கு விதி, அதன்கீழ் முன்னரே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத் தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு நீக்கப்பட்டதா கக் கருதப்படவேண்டுமோ அத்தேதியானது கசெற்றில் வெளியிடப்படு தல் வேண்டும்.

பொருள் கோடல்.

24. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினு லன்றி, " பிணக்குக்காரர் " என்பது, பிணக்கொன்றுக்கான ஏதேனும் கட்சிக்காரர் அல்லது சார்த்தப்பட்ட தவறொன்றைப் புரிவதிற் சம்பந்தப் பட்ட எவரேனும் ஆள் அல்லது எவ்வாளுக்கு எதிராக ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ, அவ்வாள் எனப் பொருள்படும்.

## முதலாம் அட்டவணை

### மத்தியஸ்தர்கள் குழாத்தை நியமித்தல் (பிரிவு 5 (5)

1. மத்தியஸ்த சபை இடப்பரப்பொன்றுக்குக் குழாமொன்று நியமிக்கப்பட வுள்ளவிடத்து அல்லது எவையேனும் மேலதிக நியமனங்களைச் செய்யும் நோக் கத்துக்காக அல்லது எவையேனும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தேவை எழுகின்றபொழுதெல்லாம், ஆணைக்குழுவின் விதப்புரையின்மேல் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, அரசியல் தன்மையற்ற அத்தகைய ஆட்களிட மிருந்தும் குழுக்களிடமிருந்தும், அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்தும் அல் லது நிறுவனங்களிடமிருந்தும் அத்துடன் அத்தகைய மத்தியஸ்த சபை இடப் பரப்பானது எந்நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரிடமிருந்தும், ஆட்களின் பெயர் நியமனங்களைக் கோருகின்ற அறிவித்தலொன்றை ஆணைக்குழு வெளியிடுதல் வேண்டும்.

2. ஓராம் விடயத்தின்கீழான அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதன்மேல், அத்தகைய ஒவ்வோர் ஆளும், குழுவும் ஒழுங்கமைப்பும் அல்லது நிறுவனமும், அரசாங்க அதிபரும், குழாத்துக்கு நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமானவர் களென அது அல்லது அவர் கருதும் தகவுடையவரான ஆட்களின் பெயர்களை யும் வேறு விபரங்களையும், விதப்புரையொன்றுடன் சேர்த்து ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஆளொருவரிடமிருந்து, குழு, ஒழுங்கமைப்பு, நிறுவனம் என்பவற்றி மிருந்து அல்லது அரசாங்க அதிபரிடமிருந்து விதப்புரை பெற்றுக்கொண்ட தன்மேல், ஆணைக்குழுவானது அதன் கருத்தில் மத்தியஸ்த திறமைகளிலும் தொழினுட்பங்களிலும் முதனிலைப் பயிற்சிநெறியொன்றை மேற்கொள்வதற்குப் பொருத்தமானவர்களாகவுள்ள அத்தகைய தகவுடைய ஆட்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

4. மூன்றும் விடயத்தில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள முதனிலைப் பயிற்சியைப் பூர்த்தியாக்கியதன்மேல், நெறியை நடாத்துகின்ற ஆள் அல்லது ஆட்கள், ஒவ்வொரு பயிற்சி பெறுநர் தொடர்பிலான அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது, மத்தியஸ்தரொருவராகப் பணியாற்றுவதற்கு அத்தகைய பயிற்சிபெறுநரின் நாட்டம், அறிவு, திறமைகள் என்பன பற்றிக் கருத்துரை கூறுதல் வேண்டும்.

5. நான்காம் விடயத்தில் குறிப்பிடு செய்யப்பட்ட அறிக்கையைப் பெற்றதன் மேல் ஆணைக்குழுவானது, அத்தகைய அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்தபின்னர், ஒவ்வொரு மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கும் பின்வருவோரை நியமித்தல் வேண்டும் :

(1) பன்னிரண்டு ஆட்களுக்குக் குறையாத ஆட்களைக்கொண்ட மத்தியஸ்த குழாமொன்று ; அவர்களுள் ஐந்து ஆட்களுக்கு மேற்படாதோர், அத்தகைய மத்தியஸ்த சபை இடப்பரப்பானது எந்நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர்களாக இருக்கலாம் ;

(2) அத்தகைய ஏதேனும் குழாத்துக்கு காலத்துக்குக் காலம் அவசியமானதெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான மேலதிக உறுப்பினர்கள் ;

(3) குழாத்தில் உள்ள எவையேனும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள்.

6. மத்தியஸ்தர்கள் குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவரை அத்தகைய குழாத்தின் தவிசாளராக இருப்பதற்கென ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

7. குழாத்துக்கு, முதலில் நியமிக்கப்பட்ட தவிசாளர் தவிர்ந்த உறுப்பினர்கள் ஆகியோரின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர், முதலாம் ஆண்டின் முடிவிலும், எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாம் ஆண்டின் முடிவிலும் பதவியை வறிதாக்குதல் வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கானது, முழுவெண் ஒன்றாகவும் பின்னமாகவும் இருக்கின்றவிடத்து அம்முழுவெண்ணுக்கும் பின்னத்துக்கும் நேர்மேலே உள்ள முழுவெண்ணானது இப்பந்தியின் நோக்கத்துக்காக, மூன்றில் ஒரு பங்காகக் கருதப்படல் வேண்டும். அத்தகைய ஒவ்வோர் ஆண்டினதும் முடிவில் பதவியை வறிதாக்குவதற்கான உறுப்பினர்கள் பற்றிய தீர்மானம் குழாத்தின் தவிசாளரினால் சீட்டுக் குலுக்கப்படுவதன்மூலம் செய்யப்படுதல் வேண்டும் ; தவிசாளர் அத்தகைய தீர்மானத்தை ஆணைக்குழுவுக்குத் தெரிவித்தல் வேண்டும். எஞ்சியிருக்கும் உறுப்பினர்கள் மூன்றாம் ஆண்டின் முடிவில் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

8. ஏழாம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வோர் ஆண்டினதும் முடிவில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசியமானவாறான அத்தகைய நியமனங்களை ஆணைக்குழு செய்யலாம் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும் அதன்பின்னர் மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

9. (1) ஏழாம் விடயத்தின்கீழ் அல்லது அவரது பதவிக்காலம் முடிவுறுவதன் மீது பதவியை வறிதாக்குகின்ற தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர், அவர் பதவியை வறிதாக்கும் தேதியன்று ஏதேனும் கருமம் பற்றி விசாரணை செய்துகொண்டிருக்குமிடத்து, அவரது பதவி வறிதாகுதல் அத்தகைய விசாரணையை அவர் பூர்த்தியாக்கும் தேதியன்று பயனுறுதல் வேண்டும்.

(2) ஏதேனும் காரணத்துக்காகப் பதவியை வறிதாக்கும் ஓர் உறுப்பினரை அடுத்துறுவதற்கு ஆளெவரும் நியமிக்கப்படாதவிடத்து, வெளிச்செல்லும் உறுப்பினர், அவரை அடுத்துறுபவரின் நியமனம் வரையிலும் அல்லது, ஆணைக்குழு வேறுவிதமாகத் தீர்மானிக்கும்வரையில் குழாத்தின் உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) அவரது பதவிக்காலம் முடிவுறுவதன்மேல் தமது பதவியை வறிதாக்கும் குழாத்தின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

10. (1) தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர்—

(அ) ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதம் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(ஆ) காரணமொன்று காட்டப்படாது ஆணைக்குழுவால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(2) அவரது பதவியிலிருந்து விலகியுள்ள அல்லது அகற்றப்பட்டுள்ள தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் ஆகாது.

11. அவரது பதவிக்காலம் முடிவுறுவதனால் அல்லாது வேறுவகையில் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் தமது பதவியை வறிதாக்கினால், ஆணைக்குழுவானது, தவிசாளரொருவரின் விடயத்தில் அவரது இடத்தில் வேறெவரேனும் தகவுடையவரான ஆளை அவரது முன்னுறுபவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவிவகித்தற்கென நியமித்தல் வேண்டுமென்பதுடன், உறுப்பினரொருவரின் விடயத்தில் அத்தகைய தகவுடைய வேறோர் ஆளை நியமிக்கலாம்.

12. தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிவதிலும் நிறைவேற்றுவதும் தொடர்பில் ஊதியம் எதற்கும் உரித்துடையவராதலாகாது.

## இரண்டாம் அட்டவணை (பிரிவு 7 (1) (இ) )

| நிரை I<br>தவறு | நிரை II<br>தண்டனைச் சட்டக்கோவையின் ஏற்புடையனவாகவுள்ள பிரிவுகள் |
|---|---|
| பொதுவிடச்சண்டை .. | 157 |
| வேண்டுமென்று காயம் விளைவித்தல் .. .. | 314,315,325 |
| வேண்டுமென்று கடுங்காயம் விளைவித்தல் அல்லது ஆத்திரமூட்டப்படுதலின் மீது கடுங்காயம் விளைவித்தல் | 316,326 |
| உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய செயலொன்றால் காயம் விளைவித்தல் | 323 |
| உயிருக்கு அல்லது பிறரின் காப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய செயலொன்றினால் கடுங்காயம் விளைவித்தல் | 329 |
| எவரேனும் ஆளை முறைகேடாகத் தடுத்துவைத்தல் அல்லது அடைத்துவைத்தல் | 332,333 |
| தாக்குதல் அல்லது குற்றமுறையாக வலோற்காரத்தைப் பிரயோகித்தல் | 343,346,348,349 |
| இழப்பானது தனியாளொருவருக்கானதாக இருக்குமிடத்து, ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடுதல் | 386 |
| விளைவிக்கப்பட்ட இழப்பு அல்லது சேதம் தனியாளொருவருக்காக மட்டும் இருக்கும் வண்ணம் சொத்தழிப்பை ஏற்படுத்தல் | 409,410 |
| இழப்பானது தனியாளொருவருக்காக இருக்கும் வண்ணம் பத்து ரூபாப் பெறுமதியான ஏதேனும் விலங்கைக் கொல்லல் அல்லது உறுப்புக் குறைத்தல் மூலம் சொத்தழிப்பை ஏற்படுத்துதல் | 411 |
| இழப்பானது தனியாளொருவருக்காக இருக்கும் வண்ணம் கால்நடை முதலியவற்றைக் கொல்லல் அல்லது உறுப்புக் குறைத்தல் மூலம் சொத்தழிப்பை ஏற்படுத்தல் | 412 |
| குற்றமுறையான அத்துமீறல் .. .. | 433 |
| வீடத்து மீறல் .. .. .. | 434 |
| அவதூறு .. .. .. | 480 |
| ஒரு விடயம் அவதூறானதென அறிந்துகொண்டு அதனை அச்சிடுதல் அல்லது செதுக்குதல் | 481 |
| அவதூறான விடயத்தைக் கொண்டுள்ள அச்சிடப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட பொருளை அத்தகைய விடயத்தை அது கொண்டுள்ளது என அறிந்துகொண்டு விற்றல் | 482 |
| சமாதானக் குலைவை ஏற்படுத்தும் உளக்கருத்துடன் நிந்தைசெய்தல் | 484 |
| குற்றமுறையான அச்சுறுத்தல் .. .. | 486 |

## மூன்றாம் அட்டவணை (பிரிவு 7(1) (ஆ))

1. திருமணப் பிணக்குகள் தொடர்பான வழக்குகள்.

2. சித்தசுவாதீனமற்ற ஆட்கள், பராயமடையாதோர், இளங்கணர் ஆகியோரின் ஆட்கள் தொடர்பானவையும், மரணச்சொத்துக்கள் தொடர்பானவையுமான வழக்குகள்.

3. பாதுகாவலர்கள், காப்பாளர்கள், பெறுநர்கள் என்போர் தொடர்பான வழக்குகள்.

4. நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பான வழக்குகள்.

5. பிள்ளைகள் மகவேற்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட மகவேற்புக்கான விண்ணப்பங்கள் தொடர்பான வழக்குகள்.

6. பிறப்புகள், இறப்புகள் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான வழக்குகள்.

7. பிரிவிடுதல் வழக்குகள்.

8. மரணசாதன வழக்குகள்.

9. கடனிறு வகையறவுக் கட்டளைச்சட்டத்தின் கீழான வழக்குகள்.

10. கடலாண்மை வழக்குகள்.

11. தேர்தல் மனுக்கள் தொடர்பான வழக்குகள்.

12. அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான வழக்குகள்.

13. இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கடன் இணக்கச் சபையின் முன்னர் முடிவுறாதிருந்த விண்ணப்பங்கள் தொடர்பான, அல்லது கடன் இணக்கச் சபையினால் தீர்வைமூலம் அல்லது விண்ணப்பத்தை நிராகரித்தல்மூலம் இறுதியாகக் கையாளப்பட்ட வழக்குகள்.

14. ஈட்டுச் சட்டத்தின் கீழான வழக்குகள்.

15. பாராளுமன்றச் சிறப்புரிமைகள், மீறுகைகள் தொடர்பான வழக்குகள்.